பேரவை முன் வைக்கப்பெற்ற ஏடுகள்.

அ. சட்டப்படிக்கான விதிகளும், ஆணைகளும்.

104. கோவை, திருவாளர்கள் ஆர். ஏ. வி. டெக்ஸ்டைல்ஸ் நிறுவனத்தாரால் செலுத்தப்பட வேண்டிய விற்பனை வரியை 27–11–1990 முதல் மூன்று ஆண்டு காலத்திற்கு தள்ளிப் போடுவது குறித்து வணிகவரிகள் மற்றும் சமய அறக்கட்டளைகள் துறையின் 3–4–1991–ஆம் நாளிட்ட 193–ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை [தமிழ்நாடு 1959–ஆம் ஆண்டு பொது விற்பனை வரிச் சட்டத்தின் (தமிழ் நாடு) சட்டம் 1/1959 53(5) பிரிவின் கீழ் பேரவை முன் வைக்கப்பெற்றது.]

105. கோவை, திருவாளர்கள் ரவீந்திரா மில்ஸ் லிமிடெடினால் செலுத்தப்பட வேண்டிய விற்பனை வரியை 27–1–1990 முதல் மூன்று ஆண்டு காலத்திற்கு தள்ளிப் போடுவது குறித்து வணிகவரிகள் மற்றும் சமய அறக்கட்டளைகள் துறையின் 27–8–1990–ஆம் நாளிட்ட 517–ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை [தமிழ்நாடு 1959–ஆம் ஆண்டு பொது விற்பனைச் வரிச் சட்டத்தின் (தமிழ்நாடு) சட்டம் 1/1959 53(5) பிரிவின் கீழ் பேரவை முன் வைக்கப் பெற்றது.]

ஆ. அறிக்கைகள், அறிவிக்கைகள் ஏனைய தாள்கள்.

73. கோரிக்கை எண். 26—கைத்தறி மற்றும் துணித் தொழில் துறை மீதான கொள்கை விளக்கக் குறிப்பு, 1991–92 (தமிழ், ஆங்கிலம்).

74. சமூக நலத் துறை பற்றிய செயல் முறைத் திட்டம், 1991–92 (ஆங்கிலம்).

75. நிலவரித் துறை, மாவட்ட நிருவாகம், இயற்கைச் சீற்றங்கள் குறித்த துயர் தணிப்பு மற்றும் இழப்பீடுகளும் ஒதுக்கீடுகளும் குறித்த கொள்கை விளக்கக் குறிப்புகள், 1991–92 (தமிழ், ஆங்கிலம் . கோரிக்கை எண்கள் 1, 11, 41 மற்றும் 46.)

76. கோரிக்கை எண். 5—முத்திரைத் தாள்கள் — நிருவாகம் பற்றிய கொள்கை விளக்கக் குறிப்பு, 1991–92 (தமிழ் ஆங்கிலம்).

77. கோரிக்கை எண். 6—பத்திரப் பதிவுத் துறை பற்றிய கொள்கை விளக்கக் குறிப்பு, 1991-92 (தமிழ், ஆங்கிலம்).

78. கோரிக்கை எண். 44—எழுதுபொருள் அச்சுத் துறையின் பணி குறித்த கொள்கை விளக்கக் குறிப்பு, 1991-92 (தமிழ், ஆங்கிலம்).

79. சர்க்கரைத் துறை பற்றிய செயல்முறைத் திட்டம், 1991-92 (தமிழ், ஆங்கிலம்).

80. பெருந்தொழில்கள் பற்றிய செயல்திட்ட ஆய்வுரை, 1991-92 (தமிழ், ஆங்கிலம்).

81. புவியியல் மற்றும் சுரங்கத் துறை பற்றிய செயலாக்கத் திட்டம், 1991-92 (தமிழ், ஆங்கிலம்).

82. கோரிக்கை எண். 31—ஆதிதிராவிடர், பழங்குடியினர் நலத்துறை பற்றிய கொள்கை விளக்கக் குறிப்பு, 1991-92 (தமிழ், ஆங்கிலம்).

83. தொழில்கள் பற்றிய சாதனைத் திட்டம், 1991-92 (தமிழ், ஆங்கிலம்).

84. ஆதிதிராவிடர், பழங்குடியினர் நலத் துறை பற்றிய செயல்முறைத் திட்டம், 1991-92 (ஆங்கிலம்).

85. பொது நிறுவனங்கள் குழுவின் எட்டாவது அறிக்கை, 1991-92.

86. பொது நிறுவனங்கள் குழுவின் ஒன்பதாவது அறிக்கை, 1991-92.

87. பொது நிறுவனங்கள் குழுவின் பத்தாவது அறிக்கை, 1991-92.

88. உடுக்குறியிடப்பெறாத வினாக்களும், விடைகளும் முதல் பட்டியல் (எண்கள் 1 முதல் 25 வரை).